# 18 சைவ சித்தாந்தத்தில் பாசம்

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் மூன்று உண்மைப் பொருட்களையும் அவற்றின் இயல்புகளையும் கூறுகின்றது. இவற்றில் பதி, பசு பற்றி முன்னைய வகுப்புகளில் கற்றோம். இங்கு பாசம் பற்றிக் கற்போம்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் பாசம் எனப்படும். இதனை மும்மலம் என்றும் கூறுவர். இவை ஆன்மா இறைவனை உணர்ந்து பேரின்பம் பெறுவதற்குத் தடையாய், அவ் ஆன்மாவைப் பந்தித்து நிற்பதால் பாசம் எனப்பட்டது. இறைவனை அடையாத வகையில் ஆன்மாவை மாசுபடுத்தும் காரணத்தினால் அவை மலங்கள் என்றும், ஆன்மாவைப் பந்தித்து நிற்பதால் தளை அல்லது கட்டு என்றும் அழைப்பர்.

## அ. ஆணவம்

மும்மலங்களுள் ஆணவமே உயிரை அநாதியாகப் பற்றியுள்ளது. இதனை மூலமலம், சகசமலம், இருள்மலம் என்றும் கூறுவர். ஆணவம் என்பதன் பொருள் ஆன்மாவை அணுத்தன்மை செய்தல் என்பதாகும். அதாவது பேரறிவும் பேராற்றலும் உடைய ஆன்மாவை சிற்றறிவும், சிறு செயலும் உடையதாக்குதலாகும்.

உயிர்களிடத்தில் ‘‘நான்’’ என்னும் அகந்தையையும் ‘‘எனது’’ என்னும் மமதையையும் ஆணவம் உண்டாக்கும். இது அகந்தை என்னும் அகப்பற்றும், மமதை என்னும் புறப்பற்றும் நிலையில்லாதவற்றை நிலையானவை என்று எண்ணச் செய்யும். பொது நலத்தைத் தவிர்த்து, தன்னலத்தை வளர்க்கும். குறுகிய மனப்பான்மையை உருவாக்கும்.

ஆணவம் இருளை விடக்கொடியது என்றும் கூறப்படும். இருள் பிற பொருளை மறைத்தாலும், இருளாகிய தன்னைக் காட்டும். ஆணவ இருளோ பிறவற்றை மறைப்பது போலவே தன்னையும் காட்டாது மறைக்கும் இதனை,

> **‘‘ஒரு பொருளும் காட்டாது இருள் உருவங் காட்டும்**
> **இருபொருளும் காட்டாது இது’’**

என உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில் குறிப்பிட்டுள்ளார். ஆணவத்தை நாம் கடவுளுடைய திருவருளினாலேயே வலியிழக்கச் செய்ய முடியும். கடவுள் வழிபாட்டினாலும், நல்லோர் சேர்க்கையினாலும் நல்ல நூல்களைப் படிப்பதினாலும் வலி குன்றச் செய்யலாம்.

## ஆ. கன்மம்

கன்மம் என்பது வினை அல்லது செயல் எனப் பொருள்படும். இது நல்வினை, தீவினை என இரண்டு வகைப்படும். நல்வினையானது சிவ நல்வினை, பசு நல்வினை என்றும், தீவினையானது சிவத்தீவினை, பசுத்தீவினை எனவும் பகுக்கப்படும்.

சிவ நல்வினையானது சிவதொண்டும், சிவனடியார் தொண்டுமாம். பசு நல்வினையாவது உயிர்களுக்கு செய்யும் பல்வகை உபகாரங்களாகும். சிவத்தீவினையாவது சிவனையும், சிவனடியார்களையும் நிந்தை செய்தலாகும். பசுத்தீவினையாவது உயிர்களுக்கு செய்யும் தீங்குகளாகும். இவ்வினைகள் மூவகைப்படும். அவை சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் என்பன.

பிராரத்தம் என்பது, முற்பிறவிகளில் செய்த வினைகளில் இப்பிறவிகளில் நாம் அனுபவிக்கும் வினைத்தொகுதியாகும். பழ வினையை அனுபவிக்கும் போது புதிதாக புரியும் வினைத்தொகுதி ஆகாமியம் எனப்படும். இந்த ஆகாமியத்திலும் ஒரு பகுதி உடனுக்குடன் அனுபவிக்க நேரிடும். அதுவும் பிராரப்துவமாய்க் கழியும். முன்னைய பிறவிகளில் செய்த வினைகளிலும் இப்பிறவியிற் செய்த வினைகளிலும் அனுபவிக்கப்படாமல் அடுத்து வரும் பிறவிகளுக்கென எஞ்சிக்கிடக்கும் வினைத்தொகுதி சஞ்சிதமாகும்.

வினைகள் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் செய்யப்படுகின்றன. நாம் எண்ணும் எண்ணமும், நாம் சொல்லும் சொல்லும், நாம் செய்யும் செயலும் அனைத்தும் கன்மமேயாகும். இவை தமக்குரிய பலனைத் தந்தே தீரும். கர்மம் பலன் கருதாது, இறை அர்ப்பணமாகச் செய்யும் போது மனிதனை இறைவனுடன் இணைக்கின்றது.

## இ. மாயை

உலகத்தின் தோற்ற ஒடுக்கங்கட்டு நிலைக்களனாய், முதற் காரணமாய் விளங்கும் சக்தி மாயை என்று சொல்லப்படும். இம்மாயை சுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, அசுத்தமாயை என மூவகைப்படும். சுத்தமாயை சிவதத்துவம் எனவும், சுத்தாசுத்தமாயை வித்தியாதத்துவம் எனவும், அசுத்த மாயை ஆன்ம தத்துவம் எனவும் கூறப்படும்.

உயிர் ஆணவப் பிடிப்பிலிருந்து நீங்குவதற்கு மாயை உதவுகின்றது. அதனாலேயே திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார் மாயை பற்றி கூறும்போது ''விடிவாம் அளவும் விளக்கனைய மாயை'' எனக் குறிப்பிடுகின்றார். இருளாகிய ஆணவப் பிடியிலிருந்து விடுபடுவதற்கு உதவும் ஒளியே மாயை என்பது அத்தொடரின் பொருளாகும். மாயையின் தோற்றங்களாகிய தனு (உடம்பு), கரண (அறிகருவிகள்), புவன (உலகம்), போகங்கள் இன்பதுன்பங்களாகிய அநுபவம் உயிர்களின் ஈடேற்றத்திற்கு உதவும் சாதனங்களாக அமைந்துள்ளன. எனவே நாம் நமக்குக் கிடைத்திருக்கும் தனு, கரண, புவனபோகங்களைப் பேணி இறைவனை அடைவோம்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 🕮 பாடச் சுருக்கம்

- ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்களாகும்.
- ஆணவத்தால் ''நான்'' என்னும் அகந்தையும், 'எனது' என்னும் மமதையும் ஆன்மாக்களிடம் உள்ளன.
- நல்வினையானது சிவ நல்வினை, பசுநல்வினை என்றும் தீவினையானது சிவத்தீவினை, பசுத்தீவினை என்றும் பகுக்கப்படும்.
- வினைகள், பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் என மூன்றாகக் கூறப்படும்.
- மாயை, சுத்தமாயை; சுத்தாசுத்தமாயை; அசுத்தமாயை என மூவகைப்படும்.
- தனு, கரண, புவன போகங்களை தக்கவாறு பேணி இறைவனை அடைய முயல வேண்டும்.

## ✍ பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. சித்தாந்தம் குறிப்பிடும் உண்மைப் பொருட்களைத் தருக.
2. பாசத்தை மலம் என்று கூறுவதன் காரணத்தைத் தருக.
3. ஆணவம் இருளை விடக் கொடியது எனக் கூறப்படுவது ஏன் என நீர் கருதுகின்றீர்?
4. பசு நல்வினை, பசுத்தீவினை என்பதன் மூலம் நீர் கருதுபவற்றை குறிப்பிடுக.
5. சிவ நல்வினை என்பதன் மூலம் நீர் கருதுபவற்றை சுருக்கமாக குறிப்பிடுக.

## ॐ செயற்பாடு

திருவருட் பயனில் பாசம் பற்றிக் கூறப்படும் கருத்துக்களை தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.